மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய அரசு 9 பேருந்துகளுக்குண்டான அந்த வழித்தட நீட்டிப்புகளுக்கும் உத்தரவுகள் வழங்கப்பட்டு, இன்று மக்களுக்கு பேருந்து சேவைகளைப் புரிந்துகொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டுகின்ற வழித்தடங்களில் பயணிகளுடைய எண்ணிக்கைகளுக்கு ஏற்ப மாண்புமிகு முதலமைச்சர் அம்மாவினுடைய உத்தரவைப் பெற்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ராஜநாயகம் அவர்கள்.*

திரு. மு. ராஜநாயகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறந்தாங்கி தொகுதி மக்களுடைய நலனுக்காக அதிகமான பேருந்து வசதியைச் செய்த மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அம்மா அவர்களிடம் ஆணையைப் பெற்று வழங்கிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தங்கள் வாயிலாக நன்றி கூறி அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 481, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

481—

மாணவர் விடுதி

***4437—திரு. ம. முத்துராமலிங்கம்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருமங்கலம் தொகுதி, கள்ளிக்குடி ஒன்றியம், வில்லூரில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மாணவ, மாணவியர் விடுதிகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2013 மே 13]

திருமங்கலம் தொகுதி, கள்ளிக்குடி ஒன்றியம், வில்லூரில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை சார்பாக மாணவர் மற்றும் மாணவியர் விடுதி துவங்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம் அவர்கள்.

திரு. ம. முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோட்டையிலே முதலமைச்சராக உட்கார்ந்து தீட்டுகிற திட்டம் எல்லாம் குக்கிராம மக்களின் முன்னேற்றத்திற்காக என்ற அடிப்படையில் அம்மா திட்டம் தந்து, புரட்சிகரமாக மக்களின் தேவைகளை நிறைவேற்றிக் கொண்டிருக்கிற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் (மேசையைத் தட்டும் ஒலி) கல்வியில் மிகப் பெரிய புரட்சிகளை ஏற்படுத்தச் செய்து மாணவ, மாணவிகளின் இன்னல் துடைத்துக் கொண்டிருக்கிற இந்த நல்ல வேளையில் என்னுடைய திருமங்கலம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கள்ளிக்குடி ஒன்றியம், வில்லூர் கிராமத்தில் 480 மாணவ, மாணவிகள் படித்துக் கொண்டிருக்கிறார்கள். கிட்டத்தட்ட 7, 8 கிலோ மீட்டர் சுற்றளவில் அங்கே மாணவ, மாணவிகள் விடுதி இல்லாத சூழ்நிலையில், அதிகம் குக்கிராமங்களே நிறைந்து இருக்கக்கூடிய அந்த வில்லூர் மேல்நிலைப் பள்ளிக்கு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் சார்பில் ஒரு மாணவர் விடுதியோ அல்லது மாணவியர் விடுதியோ அமைத்துக் கொடுத்தால் ஏழையெளிய மக்களுடைய கல்வித் தரம் உயர்வதற்கு வாய்ப்பாக இருக்கும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறு பரிசீலனை செய்து அங்கே ஒரு மாணவ விடுதியோ அல்லது மாணவியர் விடுதியோ அமைத்துத் தர முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கருணைக் கடலாய், வாழும் வள்ளலாய் அனைவருக்கும் கல்வி வழங்குவதில் சரஸ்வதி தாயாய், இல்லை என்று சொல்லும் மனம் இல்லாதவராய் நல்ல நல்ல திட்டங்கள்மூலம் தமிழகத்தில் உள்ள அனைத்து சமுதாய மாணவ,

[2013 மே 13

மாணவியர்களும் கல்வி பயில கல்வித் துறைமூலமும், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைமூலமும், ஆதி திராவிடர் நலத் துறைமூலமும் அனைத்து வசதிகளையும் அள்ளி அள்ளிக் கொடுத்து அனைவருக்கும் ஒரு சிறந்த வரப்பிரசாதமாக விளங்கும் எங்கள் பொன்மனத் தலைவி, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தின் ஒப்பற்ற முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த 9 ஆம் தேதி அன்று விதி 110-ன்கீழ் அருமையான, மிக மிக அற்புதமான அறிவிப்புகளை அறிவித்து அனைவரையும் மகிழ்ச்சியில் மூழ்கடித்துவிட்டார்கள். 68 விடுதிகள் மட்டும்தான் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வந்தன. அதற்கு 86.9 கோடி ரூபாயில் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டார்கள். புதியதாக இந்த வருடத்தில் 2½ கோடி ரூபாய் செலவில் 10 புதிய விடுதிகள் தொடங்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். அதில் பிற்படுத்தப்பட்டோருக்கு 5 விடுதிகள், மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கு 3 விடுதிகள், சீர்மரபினருக்கு ஒரு விடுதி, சிறுபான்மையினருக்கு ஒரு விடுதி என தாயுள்ளத்தோடு அனைவருக்கும் பிரித்துக் கொடுத்துள்ளார்கள். மூன்றாம் முறையாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், முதல்வராகப் பொறுப்பேற்ற இரண்டு வருட காலத்திற்குள் தமிழகத்தில் 66 புதிய விடுதிகளை ஆரம்பித்து மிகப் பெரிய சாதனையைச் செய்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதிலும், சிறுபான்மையினருக்கு அந்த 66 விடுதிகளில் 7 விடுதிகளை அளித்துள்ளார்கள். அதில் மாண்புமிகு அம்மா அவர்கள், தமிழகத்திலே சிறுபான்மையினருக்கு 10.6 சதவிகித விடுதிகளை ஒதுக்கி மிகப் பெரிய வரலாற்றைப் படைத்துள்ளார்கள்.

முற்பகல் 10-55

அதைப்போலவே 766 விடுதிகளைப் பராமரிக்க 25 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளார்கள். 1 இலட்சத்து 5 ஆயிரம் மாணவ, மாணவிகள் பயன்பெறும் வகையில் 23.24 கோடி ரூபாய் செலவில் மாணவர்கள் கல்வி உதவித் தொகை பெறுவதற்காக பெற்றோர்களுடைய ஆண்டு வருமான வரம்பை 1 இலட்சத்திலிருந்து 2 இலட்சமாக உயர்த்தி மிகப் பெரிய சாதனை படைத்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இத்தனை நாட்களாக வாடகைக் கட்டடத்தில் இயங்கி வந்த தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாடு

2013 மே 13]

கழகத்திற்குச் சொந்த அலுவலகம் கட்டுவதற்காக ரூபாய் 4.27 கோடி மதிப்புள்ள அரசு நிலத்தினை நிலக் கிரயமின்றி அளித்து அதில் 4 கோடி ரூபாய் செலவில் புதிய கட்டடம் கட்டுவதற்கும் ஆணையிட்டுள்ளார்கள். கடந்த 9 ஆம் தேதி மாண்புமிகு அம்மா அவர்கள் இதனை அறிவித்தாலும், தினம் தினம் இத்தகைய புரட்சிகரமான திட்டங்களை அறிவித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அனுமதி அளித்தால் தினம் தினம் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். இத்தகைய சிறப்பான திட்டங்களுடன் பொற்கால ஆட்சி புரியும் மாண்புமிகு அம்மா அவர்கள் கள்ளிக்குடி ஒன்றியம், வில்லூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் சார்பில் மாணவர் மற்றும் மாணவியர் விடுதி துவங்க தேவையிருப்பின், அதுகுறித்து தமிழகத்தின் ஒப்பற்ற முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு அவரின் ஆணைக்கிணங்க தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம் அவர்கள்.

திரு. ம. முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வாரி வாரி வழங்கிக்கொண்டிருக்கிறார்கள். எனவே, பிற்படுத்தப்பட்ட மக்களுடைய எதிர்பார்ப்புக்களையெல்லாம் ஈடு செய்கின்ற இந்த நல்ல வேளையில் கள்ளிக்குடி ஒன்றியம், வில்லூர், அதிக கிராமங்கள் நிறைந்த பகுதி. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு அம்மா அவர்களிடம் இதுபற்றி எடுத்துச் சொல்லி இந்தப் பகுதி மக்களினுடைய கல்வித் திறன் முன்னேறுவதற்கு ஒரு மாணவர் அல்லது மாணவியர் விடுதி இருந்தால், அவர்கள் மேலும் முன்னேற்றப் பாதையில் செல்வதற்கு வலுவாக இருக்கும் என்ற அடிப்படையில் வருகிற ஆண்டிலாவது அங்கு ஒரு மாணவர் விடுதி அல்லது மாணவியர் விடுதி அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு அ. முஹம்மத்ஜான்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்து மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படுமென்று தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 482, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல், மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

482—

அருங்காட்சியகம்

***28246—திரு. கே. தங்கவேல்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் மாவட்டத்தில் தொல்லியல் துறை மூலமாக அருங்காட்சியகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு முனைவர் வைகைச்செல்வன், பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திருப்பூர் மாவட்டத்தில் தொல்லியல் துறைமூலம் அருங்காட்சியகம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல் அவர்கள்.*

திரு. கே. தங்கவேல்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் மாவட்டத்தில் தொல்லியல் துறை சார்ந்த கொடுமணல்*